கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

OS.No. 36/2018
திரு. அசோக்குமார் (D.W –1) 12.01.2026.

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். 1 முதல் 3 பிரதிவாதிகள் என்னுடைய மகன்கள் என்றால் ஆமாம். பிரதிவாதிகளின் சொத்து எப்போது கிரையம் பெறப்பட்டது என்றால் 2017 ஆம் வருடம் கிரையம் பெற்றோம். 2017 ஆம் வருடம் பிரதிவாதிகள் சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்பு அவர்களுக்கு தாவாச்சொத்திற்கு அருகே வேறு சொத்துக்கள் இல்லை என்றால் சரி. பிரதிவாதிகள் அவர்களுடைய சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்பு அந்த சொத்தை பொறுத்து நேரடியாக எங்களுக்கு தெரியாது என்றால் சரி. பிரதிவாதிகள் கிரையம் பெற்ற சொத்து யார் கிரையம் கொடுத்தார்கள் என்றால் கீதா, யசோதா கிரையம் கொடுத்தார்கள். அவர்களுக்கு அந்த சொத்து எப்படி பாத்தியம் என்றால் அவர்களுடைய தகப்பனாருடைய சொத்து. கீதா, யசோதாவின் தகப்பனார் அந்த சொத்தை எப்போது கிரையம் பெற்றார் என்றால் 1963 ஆம் வருடம் கிரையம் பெற்றார். அந்த சமயத்தில் அந்த சொத்திற்கு தென்புற சொத்து யாருடையது என்றால் நடராஜன் என்பவருக்கு பாத்தியம். ஜம்புலிங்கத்திற்கு யார் சொத்துக்கள் கிரையம் செய்து கொடுத்தார்கள் என்றால் பொன்னம்மாள் கிரையம் செய்து கொடுத்தார். அவர்தான் சொத்துக்களை மனையிடங்களாக பிரித்தார். தென்புறமாக இருந்த சொத்தும் அந்த சமயத்தில் பொன்னம்மாளுக்கு பாத்தியம் என்றால் சரி. பொன்னம்மாள் சொத்துக்களை பிரித்தற்கான வரைபடம் பார்த்தீர்களா என்றால் அந்த சமயத்தில் வரைபடம் இல்லை. வரைபடங்கள் பிரித்தார்கள் என்பதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் நீதிமன்றத்தின் மூலம் பிரித்தார்கள். நீதிமன்ற தீர்ப்பாணை உள்ளது. அதை தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

**(மேலும் குறுக்கு விசாரணை தொடர அவகாசம் கோரப்பட்டதால் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)**

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2026.01.12 12:37:49 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.